# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்,
சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)
*******

முறையீட்டு மனு எண்கள். **51/2018,52/2018,53/2018,54/2018 மற்றும் 55/ந/2018**

ஆணை எண். **71/2018**

நாள் : **23/03/2018**

**திரு எம். மாதேஸ்வரன்,**
**மேட்டூர்.**

**– முறையீட்டு மனுதாரர்**

**நகராட்சி ஆணையாளர்,**
**கடலூர்,**
**மாநகராட்சி ஆணையாளர்,**
**திருப்பூர்.**

**– எதிர் மனுதாரர்கள்**

சேலம் மாவட்டம், மேட்டூர் அணை–I , கூலிலைன், எண்.47, J-பிளாக் முகவரியில் வசிக்கும் திரு M. மாதேஸ்வரன் அவர்களிடமிருந்து ஐந்து முறையீட்டு மனுக்கள், இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 51/2018,52/2018,53/2018,54/2018 மற்றும் 55/2018 எண்களிட்ட முறையீட்டு மனுக்களாகப் பதிவு செய்யப்பட்டன. முறையீட்டு மனுதாரர் தாக்கல் செய்த ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு, கீழ்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

சேலம் மாவட்டம், மேட்டூர் அணை–I , கூலிலைன், எண்.47, J-பிளாக் முகவரியில் வசிக்கும் திரு M. மாதேஸ்வரன் என்பவர், நகராட்சிப் பணியாளராக பல்வேறு நிலைகளில் கீழ்க்காணும் நகராட்சிகளில் பணியாற்றியுள்ளார் :-

| வ. எண். | நகராட்சிகளின் பெயர் | பணியின் தன்மை | பணியாற்றிய காலம் |
|---|---|---|---|
| 1. | மேட்டூர் நகராட்சி | பதிவறை எழுத்தர் | 02.12.1974 – 21.03.1978 |
| | | இளநிலை உதவியாளர் | 22.03.1978 – 14.12.1981 |
| | | இளநிலை உதவியாளர் | 17.01.1983 – 31.12.1990 |
| | | உதவியாளர் | 09.06.1997 – 18.07.2002 |

| | | | |
|---|---|---|---|
| 2. | பவானி நகராட்சி | கணக்காளர் | 22.11.1994 – 08.06.1997 |
| | | வருவாய் ஆய்வாளர் | 06.05.2005-- 10.08.2007 |
| 3. | திருப்பூர் மாநகராட்சி | உதவியாளர் | 19.07.2002 – 12.01.2005 |
| 4. | ஆத்தூர் நகராட்சி | கணக்காளர் | 11.08.2007 – 13.02.2009 |
| 5. | திருச்செங்கோடு நகராட்சி | மேலாளர் | 21.07.2009 – 20.06.2011 |

மேற்குறிப்பிட்ட நகராட்சிகளில் பணியாற்றிய காலங்களில் தனது ஊதியத்திலிருந்து பிடித்தம் செய்யப்பட்ட சேமநல நிதிக்கு வட்டித் தொகையினை வழங்கக் கோரி இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார்.

2. நகராட்சி நிர்வாக ஆணையர் தனது 29.02.2008 நாளிட்ட சுற்றறிக்கை எண்.9019/எல்3/2008 மற்றும் 10.04.2008 நாளிட்ட சுற்றறிக்கை எண்.16729/எல்3/2008–இல், ஓய்வு பெற்ற நகராட்சிப் பணியாளர்களுக்கு, பணியின் போது பிடித்தம் செய்யப்பட்ட சேமநல நிதிக்கான வட்டித் தொகையினை வழங்குவதற்கு மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைக் குறித்த வழிகாட்டுதல்களை அறிவிக்கை செய்துள்ளார். மேற்குறிப்பிட்ட சுற்றறிக்கைகளில், 10.04.2008 நாளிட்ட சுற்றறிக்கையில், மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர்கள் தங்கள் மண்டலத்திற்குட்பட்ட நகராட்சிகளில் சேமநலநிதி நிலுவைத் தொகை மற்றும் வட்டித் தொகைகள் ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கு வழங்கப் பட்டதா என்பதை மாதாந்திர கூட்டத்தில் கண்காணிக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், நிலுவைத் தொகை மற்றும் வட்டித் தொகை வழங்குவதில் காலதாமதம் ஏற்படின் அதற்கான முழுப்பொறுப்பும் சம்பந்தப்பட்ட நகராட்சி ஆணையரையே சேரும் என்றும், எனவே, அனைத்து நகராட்சி ஆணையாளர்களும் சேமநலநிதி நிலுவை வழங்குவதில் கால தாமதத்தை தவிர்க்கும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

3. மேற்குறிப்பிட்ட சுற்றறிக்கைகள் வெளியிடப்பட்டு சுமார் பத்து ஆண்டுகள் கடந்த நிலையிலும் ஓய்வு பெற்ற நகராட்சிப் பணியாளர்கள் மற்றும் அவர்களது வாரிசுதாரர்களிடமிருந்து சேமநல நிதி நிலுவை மற்றும் வட்டித் தொகை வழங்கக்கோரும் முறையீட்டு மனுக்கள் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு புற்றீசல்கள் போல் வந்த வண்ணம் உள்ளன. அவ்வாறு பெறப்படும் மனுக்கள் பெரும்பாலானவை துப்புரவுப் பணியாளர்கள் மற்றும் அடிப்படை அலுவலர்கள் சம்பந்தப்பட்டதாகவே உள்ளன.

4. முறையீட்டு மனுதாரர்கள் தங்களுக்கு வழங்கப்படவேண்டிய நிலுவைத் தொகைக் குறித்த மனுவினை காலம் கடந்து உரிய அலுவலர்களுக்கு சமர்ப்பித்ததாலா அல்லது நகராட்சியின் சீர்கேடான நிர்வாகத் தன்மையாலா என இம்முறைமன்ற நடுவத்தால் உறுதி செய்ய இயலவில்லை. எனினும், பணியில் உள்ள மண்டல நகராட்சி இயக்குநர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட நகராட்சி ஆணையாளர்கள் தாங்களும் ஓர் நாளில் பணியிலிருந்து ஓய்வு பெறப்போகிறோம் என்பதை கருத்தில் கொண்டு செயல்பட்டிருந்தால், ஓய்வு பெற்ற அடிப்படை நகராட்சிப் பணியாளர்களுக்கு இந்த நிலை ஏற்பட்டிருக்காது. இந்நேர்வு சம்பந்தப்பட்ட முறையீட்டு மனுதாரர் 30.06.2012 அன்று நகராட்சிப் பணியிலிருந்து ஓய்வு பெற்றுவிட்டார். சம்பந்தப்பட்ட நகராட்சிகள் இதுபோன்ற நேர்வுகளின் விரைந்து நடவடிக்கை மேற்கொண்டிருப்பின், ஓய்வு பெற்று சுமார் ஆறு ஆண்டுகள் கடந்த நிலையிலும் சேமநலநிதிக்கான வட்டித் தொகையினை வழங்கப்படாமலிருக்கும் நிலைமை ஏற்பட்டிருக்காது. முறையீட்டு மனுதாரர் தனது கடைசி முயற்சியாக இம்முறைமன்ற நடுவத்தை நாடியுள்ளார்.

5. முறையீட்டு மனுதாரர் ஓய்வு பெற்ற நகராட்சி மேலாளர். மனுதாரர் போன்று அகவை மூப்பெய்திய நலிவுற்ற ஓய்வூதியதாரர்கள், காலம் சென்ற நகராட்சிப் பணியாளர்களின் இல்லத்தரசிகள் மற்றும் வாரிசுதாரர்கள் ஆகியோர் நகராட்சிகள் வழங்கப்பட வேண்டிய நிலுவைத் தொகைக்காக அவர்கள் படும் இன்னல்களை அறிந்தே, நிலுவைத் தொகையினைப் பெற்றுத் தருவதாக சிலர் ஓய்வு பெற்ற நகராட்சிப் பணியாளர்களை ஏமாற்றவும் செய்கின்றனர் என இம்முறைமன்ற நடுவம் அறிய நேரிடுகிறது. எனினும், வருங்காலங்களிலாவது இதுபோன்ற நேர்வுகளில், குறிப்பாக ஓய்வு பெற்ற அடிப்படை மற்றும் துப்புரவுப் பணியாளர்கள், மகளிர்கள் சம்பந்தப்பட்ட நேர்வுகளிலாவது மேற்குறிப்பிட்ட சுற்றறிக்கைகளில் நகராட்சி நிர்வாக ஆணையர் வெளியிட்ட அறிவிக்கையின்படி சம்பந்தப்பட்ட நகராட்சி ஆணையர்கள் மற்றும் மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர்கள் கடமையுணர்வுடன் செயல்படுவார்கள் என இம்முறைமன்ற நடுவம் கருதுகிறது.

6. மேலே கூறப்பட்ட சூழ்நிலையில் முறையீட்டு மனுதாரரிடமிருந்து பெறப்பட்ட அல்லது பெறப்படும் சேமநலநிதி / பிற இனங்கள் சம்பந்தப்பட்ட நிலுவைத் தொகைகளை வழங்கக் கோரும் மனுக்களை மேலே பத்தி 1–இல் குறிப்பிடப்பட்டுள்ள பணி விவரங்களை சம்பந்தப்பட்ட நகராட்சி / மாநகராட்சி ஆணையர்களிடம் உறுதி செய்வதுடன் உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை இயக்குநரின் ஒப்புதலையும் பெற்று முறையீட்டு மனுதாரருக்கு வழங்கப்படவேண்டிய நிலுவைத் தொகையினை வழங்குவதற்கான நடவடிக்கையினை விரைந்து மேற்கொள்ளும்படி **கடலூர்** நகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது. **கடலூர்** நகராட்சி ஆணையர் மேற்கொண்ட / மேற்கொள்ளும் நடவடிக்கைகளை விரைந்து முடிப்பதற்கு, உரிய அறிவுரைகளை வழங்கவும் **செங்கல்பட்டு** மண்டல நகராட்சி ஆணையருக்கு அறிவுறுத்தப்படுகிறது.

2018– ஆம் ஆண்டு, மார்ச் திங்கள், 23–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்

2-4-18

3/4/18

பெறுநர்

1. திரு M. மாதேஸ்வரன்,
   கதவு எண். J–பிளாக் எண்.47,
   கூலி லைன், மேட்டூர் அணை – 636 401

2. நகராட்சி ஆணையாளர்,
   கடலூர் நகராட்சி, கடலூர்.

3. நகராட்சி ஆணையாளர்,
   மேட்டூர் நகராட்சி, மேட்டூர்.

4. நகராட்சி ஆணையாளர்,
பவானி நகராட்சி, பவானி. ஈரோடு மாவட்டம்.

5. மாநகராட்சி ஆணையாளர்,
திருப்பூர் மாநகராட்சி,
திருப்பூர்.

6. நகராட்சி ஆணையாளர்,
ஆத்தூர் நகராட்சி,
ஆத்தூர், சேலம் மாவட்டம்.

7. நகராட்சி ஆணையாளர்,
திருச்செங்கோடு நகராட்சி,
திருச்செங்கோடு, நாமக்கல் மாவட்டம்.

8. நகராட்சிகளின் நிர்வாக மண்டல இயக்குநர்,
நகராட்சிகளின் நிர்வாக மண்டல இயக்குநரகம்,
செங்கல்பட்டு.

9. நகராட்சி நிர்வாக ஆணையர்,
நகராட்சி நிர்வாக ஆணையரகம்,
சேப்பாக்கம், சென்னை – 600 005.

**நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்**
**பிரிவு அலுவலர் (நிர்வாகம்)**
**பேரூராட்சி பிரிவு – 3**
**இ.கோ. / உதிரி**